
Published: 14 Jun 2023 9 AM    Updated: 14 Jun 2023 9 AM

# Doctor Vikatan: மாதம் ஒருமுறை யூரினரி இன்ஃபெக்‌ஷன்... கிட்னி பாதிப்புக்கு காரணமாகுமா?

ஆர்.வைதேகி

FOLLOW US ON Google News
INSTALL VIKATAN APP

Doctor Vikatan: மாதம் ஒருமுறை யூரினரி இன்ஃபெக்‌ஷன்... கிட்னி பாதிப்புக்கு காரணமாகுமா?



Aadi Sale Started - ₹100 Amazon Gift Card Free! Get Offer x

News

கிட்னி

Share

வெறும் அறிகுறிகளை மட்டும் வைத்து யூரினரி இன்ஃபெக்‌ஷனை உறுதிசெய்ய முடியாது. அதற்கான பிரத்யேக பரிசோதனைகளான சிறுநீர் பரிசோதனை, கல்ச்சர் டெஸ்ட் போன்றவற்றைச் செய்து பார்த்தால் தான் தெரியும்.

இந்தக் கட்டுரையை ஆடியோவில் கேட்க

00:00 00:00

1x 1.5x 2x

Published: 14 Jun 2023 9 AM    Updated: 14 Jun 2023 9 AM

Doctor Vikatan: மாதம் ஒருமுறை யூரினரி இன்ஃபெக்‌ஷன்... கிட்னி பாதிப்புக்கு காரணமாகுமா?


Doctor Vikatan: மாதம் ஒருமுறை யூரினரி இன்ஃபெக்‌ஷன்... கிட்னி பாதிப்புக்கு காரணமாகுமா?

ஆர்.வைதேகி

FOLLOW US ON Google News
INSTALL VIKATAN APP

வெறும் அறிகுறிகளை மட்டும் வைத்து யூரினரி இன்ஃபெக்‌ஷனை உறுதிசெய்ய முடியாது. அதற்கான பிரத்யேக பரிசோதனைகளான சிறுநீர் பரிசோதனை, கல்ச்சர் டெஸ்ட் போன்றவற்றைச் செய்து பார்த்தால் தான் தெரியும்.

Help




கிட்னி

Share

இந்தக் கட்டுரையை ஆடியோவில் கேட்க

00:00 00:00

1x 1.5x 2x

**Doctor Vikatan: எனக்கு மாதம் ஒருமுறை யூரினரி இன்ஃபெக்ஷன் வருகிறது. வந்தால் வலி கடுமையாக இருக்கிறது. இந்த வலியை உடனடியாக சரியாக்க ஏதேனும் மருந்துகள் எடுக்கலாமா? அடிக்கடி இன்ஃபெக்ஷன் வந்தால் கிட்னி பாதிக்கப்படுமா?**

**பதில் சொல்கிறார் சென்னையைச் சேர்ந்த பெண்களுக்கான சிறுநீரகவியல் சிகிச்சை மருத்துவர் நிவேதிதா.**






மருத்துவர் நிவேதிதா

வெறும் அறிகுறிகளை மட்டும் வைத்து யூரினரி இன்ஃபெக்ஷனை உறுதிசெய்ய முடியாது. அதற்கான பிரத்யேக பரிசோதனைகளான சிறுநீர் பரிசோதனை, கல்ச்சர் டெஸ்ட் போன்றவற்றைச் செய்து பார்த்தால் தான் தெரியும். அடிக்கடி நீங்கள் உணரும் எரிச்சல் இன்ஃபெக்ஷனாலும் இருக்கலாம். வேறு காரணங்களாலும் இருக்கலாம்.

தாங்கமுடியாத வலி ஏற்படும் போது, அவசரத்துக்கு வேண்டுமானால் பொட்டாசியம் சிட்ரேட் என்ற சிரப்பை குடிக்கலாம். அதுவும் அதிகபட்சமாக ஒருவேளை அல்லது இரண்டு வேளைகளைத் தாண்டக்கூடாது. அடுத்தபடியாக மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சையை நாடுவது தான் சரியானது.

உங்களுடைய பிரச்னை இன்ஃபெக்ஷனால் ஏற்பட்டதா, எந்த வகையான இன்ஃபெக்ஷன் என்பதை எல்லாம் டெஸ்ட்டில் பார்த்து அதற்கேற்ப மருத்துவர் சிகிச்சை அளிப்பார். சிறுநீரகங்களில் கல் இருந்தாலோ, புண் இருந்தாலோ அதற்கு வேறு சிகிச்சை அளிப்பார்.

அடிக்கடி வரும் சிறுநீரகத் தொற்று காரணமாக கிட்னி பாதிக்குமா என்றால் அது உங்கள் பிரச்னையின் தீவிரத்தைப் பொறுத்தது. நீண்ட காலமாக இன்ஃபெக்ஷன் இருக்கிறது என்றால் அதன் காரணமறிந்து சிகிச்சை கொடுக்கப்பட வேண்டும். உதாரணத்துக்கு, கல் இருந்தால் அதனால் ஏற்படும் இன்ஃபெக்ஷன் அறிகுறி வெளியே தெரியும். ஆனால் உள்ளே கிட்னி பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை ஸ்கேன் மூலம் உறுதிசெய்து, கற்களை அகற்ற சிகிச்சை எடுக்க வேண்டியது மிக மிக அவசியம்.



சிறுநீரக பாதிப்புகள்!

ஒருவேளை சம்பந்தப்பட்ட நபர் சர்க்கரை நோயாளியாக இருந்து, சர்க்கரை அளவு கட்டுப்பாடின்றி இருந்தால், அதன் காரணமாகவும் கிட்னி பாதிக்கப்படும். அதற்கு சர்க்கரை அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். எனவே உங்கள் விஷயத்தில் தொற்றுக்கான காரணம் அறிந்து எடுக்கப்படும் சிகிச்சை தான் பலன் தரும். தற்காலிக நிவாரணங்கள் நிரந்தமானவை அல்ல.

**உங்கள் கேள்விகளை கமென்ட் பகுதியில் பகிர்ந்து கொள்ளுங்கள்; அதற்கான பதில்கள் தினமும் விகடன் இணையதளத்தில் #DoctorVikatan என்ற பெயரில் வெளியாகும்.**


**இந்தக் கட்டுரைகளையும் படிக்கலாமே!**


நீட், கல்விக் கொள்கை, விவசாயிகள் போராட்டம்,.. மிரளாத மிருதுளா! | போராட்டக்களத்தில்


மிடுக் உடை; கையில் வொயிட் பேப்பர், ஸ்டாம்ப்,.. போலி ரயில் டிக்கெட் கொடுத்து கல்லா கட்டிய


'மாப்பிளை TTF வாசன் என பரவும் வதந்தி!' உண்மையைப் பகிர்ந்த சீரியல் நடிகை சங்கீதா


ரேகா ஜுன்ஜுன்வாலா, விஜய் கேடியா, டோலி கண்ணா.. இந்திய பெரும் முதலீட்டாளர்கள் வாங்கிய


மணிப்பூர்: "நிர்வாணமாக்கப்பட்டது பழங்குடிப் பெண்கள் அல்ல, பாரதத் தாய்;


ஓராண்டில் 1000 டன் விளைபொருள் விற்பனை; திருமங்கலம் ஒழுங்குமுறை

View Comments (1)

health kidney doctor vikatan urinary infection kidney stone